யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவ நாகரிகம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை விடைத்தாளில் புள்ளடி ( ✕ ) இடுவதன் மூலம் காட்டுக.**

01) திருச்சபையில் முதல் நியமனம் பெற்ற பணியாளர்கள்
(1) திருத்தொண்டர் (2) அப்போஸ்தலர் (3) மூப்பர்
(4) பேயோட்டுனர் (5) வாசகர்

02) ஐயாயிரம் ஆண்கள் உட்பட பலர் மனம் மாறியது
(1) பேதுருவின் முதலுரையில் (2) கொர்ணேலியுவின் மனமாற்றத்தில்
(3) எருசலேம் பொதுச் சங்கத்தில் (4) அழகு வாயிலில் முதற் புதுமையில்
(5) பவுலின் மறைபோதக பயணத்தில்

03) முதல் முறையாகச் சீடர்கள், கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்ட இடம்
(1) உரோமை (2) பாலஸ்தீனம் (3) செசாரியா
(4) சமாரியா (5) சீரிய அந்தியோக்கியா

04) பேதுருவால் லிஸ்திராவில் ஆற்றப்பட்ட புதுமையாக குறிப்பிடப்படுவது
(1) ஜனேயாவின் பிணிபோக்கல்
(2) தொற்கா என்னும் பெண் சீடரை உயிர்பெறச் செய்தல்
(3) யூத்திகு என்னும் இளைஞனை உயிர்பெறச் செய்தல்
(4) குருடனுக்குப் பார்வை பெறச் செய்தல்
(5) மந்திரவாதியை மனம்மாற்றுதல்

05) 'பேரரசின் திருச்சபை' என அழைக்கப்படக் காரணமானவர்
(1) கொன்ஸ்தாந்தின் (2) கொன்ஸ்தாந்தியுஸ் (3) யூலியன்
(4) வாலன்ஸ் (5) தியோடோசியுஸ்

06) மனுக்கேய பேதகத்திற்கு எதிராகச் சாவு மணி அடித்தவர்
(1) பேதுரு (2) யோவான் (3) கிளமென்ற்
(4) அகுஸ்தீனார் (5) பவுல்

07) முதல் கிறிஸ்தவ நாடு ............................................ ஆகும்.
(1) பிரான்ஸ் (2) ஜேர்மனி (3) ஆர்மேனியா
(4) அயர்லாந்து (5) பிரித்தானியா

08) உரோமைப் பேரரசின் மேற்குப்பகுதி கோத்திரப் படையெடுப்பினால் அழிக்கப்பட்ட காலம்
(1) வேதகலாபனையின் முடிவின் போது
(2) 3ம் நூற்றாண்டின் இறுதியில்
(3) 1ம் நூற்றாண்டில்
(4) 5ம் நூற்றாண்டில்
(5) 8ம் நூற்றாண்டின் மத்தியில்

09) சிலோவிக் நாடுகளுக்கு நற்செய்தியைக் கொண்டு வந்த இரண்டு துறவிகள்
(1) புனித கொஸ்மஸ், தமியான்
(2) புனித சிறில் மெத்தோடியஸ்
(3) புனித ஹைசிந், சிறில்
(4) புனித சிறில், தமியான்
(5) புனித மெர்ததோடியஸ், வின்சென்ட்

10) ஆரிய பேதகத்துக்கு எதிராகப் போராடியவர்களுள் குறிப்பிடப்படாதவர்
(1) தியாக்கோன் அத்தனாசியார்
(2) புனித பசில்
(3) கிரகோரி நாசியென்ஸ்
(4) அலெக்ஸ்சாந்திரிய ஆயர் அலெக்சாந்தர்
(5) ஆயர் தியோனாஸ்

11) வனத்து அந்தோனியார் திருச்சபை வரலாற்றிலே கீழ்க்கண்டவாறு இணைகிறார்.
(1) பெரும் இறையியலாளராக
(2) திருச்சபைத் தந்தையாக
(3) கீழைத்தேச தபசு வாழ்க்கை முறையின் தந்தையாக
(4) திருச்சபையின் மெய்யியலாளராக
(5) மறை சாட்சியாளராக

12) A - பிரான்சிஸ்கன் சபை
B - ஆசீர்வாதப்பர் சபை
C - டொமிக்கன் சபை
D - வின்செந்தியான் சபை
E - சலேசியன் சபை
மேற்குறிப்பிட்டுள்ளவற்றில் 13ம் நூற்றாண்டில் திருச்சபையின் வளர்ச்சிக்குத் துணைநின்ற இரவலர் சபைகள் இரண்டினைக் குறிப்பிடுவன
(1) A, B
(2) B, C
(3) C, D
(4) A, C
(5) D, E

13) தேவாலயத்தில் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளாத குழுவினர்
(1) சதுசேயர்
(2) பரிசேயர்
(3) எஸ்சீனர்
(4) எழுத்தர்
(5) வனத்து பிதாக்கள்

14) புனித ஆசீர்வாதப்பரால் கி. பி. 529 இல் கட்டப்பட்ட துறவற மடம்
(1) புரோயுல்லோ
(2) போர்சியுங்குலாவே
(3) கஸ்தில்லே
(4) மொன்ட்டேகசினோ
(5) ஸ்பானியா துறவற மடம்

15) புதிய துறவற சபைகளை ஆரம்பிப்பதையோ, புதிய துறவற வாழ்க்கைச் சட்டங்களை எழுதுவதையோ தடை செய்தது
(1) நான்காம் லாத்தரன் பொதுச் சங்கம்
(2) லாத்தரன் பொதுச் சங்கம்
(3) எபேசு பொதுச் சங்கம்
(4) எருசலேம் பொதுச் சங்கம்
(5) கல்சடோன் பொதுச் சங்கம்

16) பின்வருவோருள் டொமினிக்கன் சபையை சாராத இறையியலாளர்கள்
(1) புனித பெரிய அல்பர்ட்
(2) புனித தோமஸ் அக்குவினஸ்
(3) ஈவெஸ் கொங்கார் அடிகள்
(4) லக்றான்ஜ் அடிகள்
(5) புனித 7ம் கிறகோரியார்

17) ஆச்சிரம வாழ்க்கையை சிறப்படையச் செய்தவர்களுள் பொருத்தமற்றவர்களாக கருதப் படுபவர்கள்
(1) புனித அத்தனாசியார், புனித அகுஸ்தீனர்
(2) புனித மாட்டின், புனித யோண்கனிசியுஸ்
(3) டொமினிக்கூஸ்மன், புனித பீற்றர் கனிசீயஸ்
(4) புனித கயிசேபியுஸ், புனித ஆசீர்வாதப்பர்
(5) வனத்து அந்தோனியார், புனித பசில்

18) பிரான்சிஸ்கு அசிசியார் சபையின் தொட்டில் என அழைக்கப்படுவது
(1) அசிசிகுடில் (2) போர்சியுஸ் குலாவே (3) இத்தாலி
(4) பிரான்ஸ் (5) அயர்லாந்து

19) வட அம்பிரியாவில் கிறிஸ்தவம் பரவக் காரணமானவர்
(1) புனித கொலம்பான் (2) புனித அய்டன் (3) மன்னர் பிஜோர்ன்
(4) மன்னர் லூயிஸ் (5) குளோவிஸ்

20) ‘மிலான் அரச சாசனம்’ பிரகடனம் செய்யப்பட்ட ஆண்டு
(1) கி. பி. 324 (2) கி. பி. 313 (4) கி. பி. 312
(4) கி. பி. 300 (5) கி. பி. 410

21) மத்திய காலத்தில் திருச்சபை ............................... என இரு சமூக ஸ்தாபனங்களால் ஆட்சி செய்யப்பட்டது. இடைவெளிக்குப் பொருத்தமான சொற்றொடரைத் தெரிவு செய்க.
(1) கிரேக்கப் பேரரசு, உரோமைப் பேரரசு
(2) கத்தோலிக்க திருச்சபை, புரட்டஸ்தாந்து திருச்சபை
(3) கத்தோலிக்க திருச்சபை, உரோமைப் பேரரசு
(4) துறவற சபைகள், சீர்திருத்த சபைகள்
(5) உரோமைப் பேரரசு, புரட்டஸ்தாந்து திருச்சபை

22) ‘நம்பிக்கையால் மட்டும் ஒருவன் மீட்படைய முடியும்’ என புனித பவுலின் கூற்றை ஆணித்தரமாக வெளிப்படுத்தி போதித்தவர்
(1) ஜோண் கல்வின் (2) ஸ்விங்கிளி (3) தோமஸ் முன்ற்சர்
(4) மாட்டின் லூதர் (5) வில்லியம் கேரி

23) திரிதெந்தின் பொதுச்சங்கம் கூட்டப்பட்ட ஆண்டாகக் கொள்ளக்கூடியது
(1) 1345 - 1363 (2) 1545 - 1563 (3) 1645 - 1663
(4) 1551 - 1552 (5) 1535 - 1545

24) புனித இஞ்ஞாசியாரின் ஆன்மீக வாழ்வின் ஊற்றாக அமைந்த நூல்கள்
(1) கிறிஸ்துவின் வாழ்க்கை, புனிதர்களின் வாழ்க்கை
(2) தெய்வீக அன்பு, புனிதர்களின் வாழ்க்கை
(3) புனிதத்துவத்தின் வழி, ஆன்மீகப் பாடல்
(4) நிறைவாழ்வின் வழி, உள்ளகமாளிகை
(5) இருண்ட இரவு - ஆன்மீகப் பாடல்

25) இலங்கையின் வடபகுதியில் கல்வியை உயர்த்தும் நோக்கில் ஆயர் பொஞ்சீன் அவர்களால் உருவாக்கப்பட்ட சுதேச துறவற சபை
(1) பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்கள் சபை
(2) திருச்சிலுவைக் கன்னியர் சபை
(3) சூசையப்பர் அருட்சகோதரர்கள் சபை
(4) அமலமரித்தியாகிகள் சபை
(5) தூய சம்மனசுகள் சபை

26) A - ஜெனிவாவில் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பித்தார்.
B - படைவீரர் மத்தியில் குருத்துவப் பணியாற்றினார்.
C - சூறிச் தலைநகரில் தமது போதனைகளை எடுத்துரைத்தார்.
D - இறைவெளிபாடு தொடர்ந்து நடைபெறுகிறது என நம்பினார்
E - தேவதாய்க்கு எதிராகவும் திருப்பயணங்களுக்கு எதிராகவும் போதித்தார்.
மேற்கூறப்பட்டவற்றுள் ஸ்விங்ளியின் சீர்திருத்தத்தோடு தொடர்புடையது
(1) A, B, C (2) B, C, E (3) B, D, E (4) A, B, D (5) A, D, E

27) கி. பி. 1536 ம் ஆண்டில் கப்புச்சியன் சபையை அதிகார பூர்வமாக அங்கீகரித்தவர்
(1) திருத்தந்தை ஏழாவது கிளமெண்ட்
(2) மத்தேயு டீ பஸ்ஸி
(3) திருத்தந்தை மூன்றாவது பவுல்
(4) திருத்தந்தை ஆறாம் பத்திநாதர்
(5) திருத்தந்தை பதின்மூன்றாம் கிறகோரியார்

28) A - இவர் எழுத்தாளர்களின் பாதுகாவலர் ஆவார்.
B - புனிதத்துவத்தின் வழி எனும் நூல் எழுதினார்.
C - தமது இல்லத்தை வைத்தியசாலையாகப் பயன்படுத்தியவர்.
D - ஜெனிவாவில் கல்வின் பிரிவினைவாதிகளை மனம் மாற்றினார்.
E - புனித சார்லஸ் பொரோமேயாவிற்கு அன்பு செலுத்தினார்.
மேற்கூறப்பட்டவற்றுள் புனித சலேசியாருடன் தொடர்பு அற்றவையாக கருதப்படுபவை
(1) A யும் D யும் (2) A யும் E யும் (3) D யும் E யும்
(4) B யும் C யும் (5) E மாத்திரம்

29) 1604 இல் குறோய்த்தீவில் முதன் முதலில் திருப்பலியை ஒப்புக் கொடுத்தவர்
(1) தூரிபியூஸ் (2) நிக்கொலஸ் (3) ஐசெக்பேக்ஸ்
(4) ஒடிலோ (5) றொமோல்ட்

30) மத்திய கால சமூகத்தின் சிந்தனையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய அமைப்பு
(1) மறுமலர்ச்சி (2) சமயச் சார்பின்மை (3) பிரான்சுப் புரட்சி
(4) சோஷலிசம் (5) கம்யூனிசம்

31) சீனாவில் மறைபோதக பணிக்கு முக்கிய இடம் வகித்தவர்
(1) பிரான்சிஸ் சவேரியார் (2) மத்தேயுரிச்சி (3) லீசன்வ் உன
(4) றொபேட்டி நொபிலி (5) ஜேம்ஸ் சூடன்

32) இந்தியத் திருச்சபையின் பண்பாட்டு மயமாக்கலுக்கு வழி வகுத்தவர்
(1) பிரான்சிஸ் சவேரியார் (2) றொபேர்ட்டி நொபிலி
(3) தோமையார் (4) மத்தேயுரிச்சி
(5) அன்னை திரேசா

33) 9ம் தர்மபராக்கிரமபாகுவின் மரணத்தை அடுத்து 1520 இல் கோட்டை மன்னனாகப் பணிபுரிந்தவர்
(1) விஜயபாகு (2) 7ம் புவனேகபாகு (3) மாயதுன்ன
(4) பரராஜசிங்கம் (5) ஜெயவீரா

34) கி. பி. 1543 ல் மறைபரப்புக் குழுவாகிய பிரான்சிஸ்கன் சபை இலங்கைக்கு வருகைதந்து பணிபுரிந்தனர். இவர்களில் பொருத்தமற்றவர்
(1) அந்தோனியா பதாம் (2) சீமோன் கொய்ம்
(3) றா கொன்சாலோ (4) மனுவேல் டே மிரண்டா
(5) யுவான் விலா கொன்தே

35) இந்தியாவில் நான்கு சீர்திருத்த சபைகள் இணைந்து தென்னிந்தியத் திருச்சபையாக உருவாகக் காரணமாக இருப்பது

(1) பிரிவினையை ஏற்படுத்த விரும்பாமையாகும்.

(2) மறைபணியாளர்கள் மத்தியில் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த முற்பட்டமையாகும்.

(3) ஏனைய சபையோரிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டுவதற்காகும்.

(4) இறையியல் சிக்கல்கள் தலைதூக்கியமையால் ஆகும்.

(5) தமது மறைப் பணி செயற்பாட்டை விரிவுபடுத்த ஆகும்.

36) ஜப்பானியில் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களால் கல்வித் துறைக்கு ஆற்றிய முக்கிய பங்களிப்பு

(1) ஒழுக்கவியல் தொடர்பான கல்வியை அளித்தமையாகும்.

(2) தொழில்நுட்பம் தொடர்பான கல்வியை அளித்தமையாகும்.

(3) குருகுலக் கல்வியை நிலைநாட்டியமையாகும்.

(4) மேற்கத்தேய கல்வி முறையை அறிமுகம் செய்தமையாகும்.

(5) சமயக் கல்விக்கு முக்கியம் கொடுத்தமையாகும்.

37) இலங்கையில் கிறிஸ்தவ கலாசாரத்தை உருவாக்குவதற்காக முன் வந்தவர்

(1) யோசவாஸ் அடிகளார்

(2) யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்

(3) மரிய மனுவல் டே மிரண்டா

(4) மிக்கேல் த மெய்லோ

5) என்றிக் என்றிக்கெஸ்

38) வட இந்தியத் திருச்சபை உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கம்

(1) சீடர்களுள் நிலவும் ஒற்றுமையை தம்முள் நிலைநாட்டுவதாகும்.

(2) மாட்டின் லூதரின் புரட்சியின் விளைவாகும்.

(3) இந்தியாவின் ஐக்கிய கூட்டுறவை ஏற்படுத்துவதாகும்.

(4) பிளவுகளைத் தவிர்ப்பதற்காகும்.

(5) ஒரே திருச்சபை என்ற நிலையை உருவாக்குவதற்காகும்.

39) A - ஜெனிவாவில் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பித்தார்.

B - கி. பி. 1806 இல் மதச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவர்.

C - வதிவிட ஆரம்ப, உயர்தர பாடசாலையை ஆரம்பித்தவர்.

D - இலங்கைத் திருச்சபைக்கு தேசிய முகத்தைப் பெற்றுக் கொடுத்தவர்.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் ஆயர் லக்தாஸ் டிமெல் அவர்களுடன் தொடர்புடைய கூற்று

(1) A, B, (2) B, C (3) C, D (4) B, D (5) A, D

40) கி. பி. 1798 இல் இலங்கையின் சிவில் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றவர்

(1) ஜேம்ஸ் ஸ்டுவார்ட் (2) பிறெடெறிக் (3) ஜெயவீர

(4) தோமஸ் மெயிலன்ட் (5) பிலிப்ஸ் பல்தோப்

41) ஜப்பானில் கத்தோலிக்க மதமானது ஒழுங்கமைக்கப்பட்ட மதமாக உருவாகியது.

(1) நெஸ்தோரியரின் வருகையின் பின்னராகும்.

(2) ஐந்தாம் நூற்றாண்டில் ஆகும்.

(3) நாடுகாண் பயணங்களை மேற்கொண்ட காலகட்டத்தில் ஆகும்.

(4) போர்த்துக்கேயரின் வருகையின் பின்னரே ஆகும்.

(5) தோமாவின் மறைமரப்புப் பணியின் காலகட்டத்தில் ஆகும்.

42) இந்தியாவிற்குள் நுழைந்த முதல் சீர்திருத்த சபை லூத்தரன் சபையாகும். இது இந்தியாவிற்கு வரக் காரணமாக இருந்தவர்

(1) பிரான்சிஸ் சேவியர் (2) ஜோர்ச் வெஸ்லி (3) கீசிகன் பாகு
(4) ஜேம்ஸ் சூடன் (5) வில்லியம் சேய்வர்

43) இலங்கையின் இரண்டாம் அப்போஸ்தலர் என அழைக்கப்படுபவர்

(1) யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்
(2) யோசவ்வாஸ் அடிகளார்
(3) கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார்
(4) அதி. வண. பெற்றக்கீனி அடிகளார்
(5) கிளமன்ட் பஞ்ஞானி

44) கி. பி. 1869 இல் இலங்கைக்கு வருகை தந்த பெண் துறவறசபை

(1) திருக்குடும்ப கன்னியர் சபை
(2) அன்பின் கன்னியர் சபை
(3) பிறர் சிநேக சகோதரிகள்
(4) நல்லாயன் கன்னியர் சபை
(5) பிரான்சிஸ்கன் சகோதரிகள்

45) ஜப்பானில் கிறிஸ்தவ மதத்தைப் போதித்த முதல் மறைபரப்பாளர்கள்

(1) பிரான்சிஸ்கன் சபையினர் (2) இயேசு சபையினர்
(3) டொமினிக்கன் சபையினர் (4) அகுஸ்தினார் சபையினர்
(5) கார்மேல் சபையினர்

46) கலாசாரத் தொட்டில் என அழைக்கப்படுவது

(1) எகிப்து (2) செசாரியா (3) பலஸ்தீனா
(4) மொசப்பெத்தேமியா (5) அசீரியா

47) 'அவரது கையினால் இஸ்ராயேலுக்கு மீட்பு உண்டாகப் போகின்றது' இதன் பொருள்

(1) எகிப்தியர் (2) கானானியர் (3) மக்கபேயர்
(4) அமோனியர் (5) அசீரியர்

48) A - மிகப் பழமை வாய்ந்த நாகரிகம்

B - ஆட்சி அதிகாரம் தெய்வத்திடமிருந்தே அரசனுக்கு கிடைக்கிறது என நம்பினர்.

C - கணிதத்துறை வைத்தியத்துறையில் தேர்ச்சி பெற்றனர்.

D - மரணத்தின் பின் வாழ்வு உண்டு என நம்பினர்

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய நாகரிகம்

(1) பபிலோனிய நாகரிகம் (2) அசிரிய நாகரிகம்
(3) நைல்நதி நாகரிகம் (4) மெசப்பெத்தேமிய நாகரிகம்
(5) உரோமை நாகரிகம்

49) பபிலோனியாவில் யூதர்கள் அடிமைகளாக இருந்த காலத்தில் அவர்களது எண்ணத்தை மாற்றி நம்பிக்கையூட்டிய இறைவாக்கினர்கள்

(1) எரேமியா, எசேக்கியேல் (2) ஆமோஸ், ஓசேயா
(3) தானியேல், ஓசேயா (4) மீக்கா, ஆமோஸ்
(5) நத்தானியேல், எசாயா

50) இஸ்ரயேலரின் பொற்காலமாக ................................ ஆட்சிக்காலம் காட்டப்படுகின்றது. இடைவெளிக்குப் பொருத்தமானது

(1) சவுல் (2) தாவீது (3) சாலமோன்
(4) ரெகபெயாம் (5) சைரஸ்